முதல்வர், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணைகள்

********

முன்னிலை.மரு.மு.இரவிச்சந்திரன்.எம்.டி.,

ந.க.எண்.7000/நி2/1/2020 நாள் : .12.2021

பொருள் : நிர்வாகம் – திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி – திருநெல்வேலி – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் 2018–19 மற்றும் 2019–2020–ம் ஆண்டு – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு மருத்துவத் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலியில் பணியமர்த்தப்பட்டவர்கள் பணிவரன் முறை செய்து ஆணைகள் வழங்குவது – தொடர்பாக.

பார்வை :
1. சென்னை, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், செயலாளர் அவர்களின் கடித எண்.2383/PSD–12/2020, நாள்:21.07.2020.
2. சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, இயக்குநரக கடித எண்.31495/E2/2/2020, நாள்: 05.08.20.
3. சென்னை, மருத்துவக்கல்வி இயக்குநரக கடித எண். 38842/நி2/5/2020–169, 228, 60, 24, 133 மற்றும் 137 நாள் : 07.08.2020.
4. இவ்வலுவலக பணி நியமன ஆணை எண்.7000/நி2/1/2020–1, 3, 4, 5 மற்றும் 6, நாள் : 07.09.2020.

********

ஆணை

பார்வை 1–இல் கண்டுள்ள கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளராக தேர்தெடுக்கப்பட்டு, பார்வை–2 மற்றும் 3–ல் கண்டுள்ள ஆணைகளின்படி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பார்வை 4–ல் கண்டுள்ள இவ்வலுவலக பணிநியமன ஆணையின்படி இளநிலை உதவியாளர்களாக பணியில் இணைந்த கீழ்க்கண்ட பணியாளர்கள் பெயருக்கு எதிராக உள்ள நாட்களில் இக்கல்லூரியில் பணியில் இணைந்துள்ளனர்.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் இணைந்த நாள் |
|---|---|---|
| 1. | செல்வன்.செ.சூரியா, இ.நி.உ | 09.09.2020 |
| 2. | செல்வி.ஜெ.கார்த்திகா, இ.நி.உ | 10.09.2020 |
| 3. | செல்வி.க.ஆதிலெட்சுமி, இ.நி.உ | 11.09.2020 |
| 4. | திருமதி.க.சமீரா சைஃப், இ.நி.உ | 11.09.2020 |

| | | |
|---|---|---|
| 5. | திரு.சு.சண்முகப்பாண்டியன், இ.நி.உ | 11.09.2020 |
| 6. | திரு.தி.மாதவன், இ.நி.உ | 23.09.2020 |
| 7. | திருமதி.மு.பத்மாவதி, இ.நி.உ | 14.10.2020 |

மேற்கண்ட இளநிலை உதவியாளர்களின் கல்வி தகுதி 10–ம் வகுப்பு தேர்ச்சி என்பதால் இப்பத்தாம் வகுப்பு பள்ளி சான்றிதழ்கள் மெய்த்தன்மை வாய்ந்தது என்ற அறிக்கை பெறப்பட்டு பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட இளநிலை உதவியாளர்கள் இக்கல்லூரியில் பணியில் இணைந்த நாள் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

**" The Regularization in subject to the outcome of the writ petitions pending on the files of the honorable high court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to therecruitment to the Post included in combined Civil Services Examination-IV for the year 2018-2019 and 2019-2020".**

மேற்படி பணிவரன்முறை செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுகால அவகாசத்தில் தொடர்ச்சியாக 2 ஆண்டு காலம் பணிபுரிந்து தகுதிகாண் பருவகாலத்தை திருப்திகரமாக முடித்திட வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், பணியில் சேர்ந்த இரண்டாண்டு காலத்திற்குள் தமிழ்நாடு மருத்துவ விதி தொகுப்பு தேர்வு மேலும், அதனோடு இணைந்த துறைத்தேர்வுகள் தேர்ச்சி மற்றும் பவானி சாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

முதல்வர்

**பெறுநர்** : சம்பந்தப்பட்ட நபர்கள்

**நகல் :** பணிப்பதிவேடு / கோப்பு

**நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :**

1. மருத்துவக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை–10.
2. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை–06.